ஸ்ரீ ஹரி:

# மதுரமுரளி


தனி பிரதி ₹15
ஆண்டு சந்தா ₹180
Delivered by India Post
www.indiapost.gov.in



பிப்ரவரி 2018
வேணு 23
கானம் 7




மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள்
அருளாசியுடன் வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிகை



வைகுண்ட ஏகாதசி, மதுரபுரி ஆஸ்ரமம், 29 Dec

# மதுரமுரளி


வேணு 23; கானம் 7


ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

## பொருளடக்கம்


| | |
|---|---|
| மதுரமான மஹனீயர்-263 | 5 |
| நான்கு சம்பாஷணைகள் | 9 |
| அன்புள்ள ஸத்ஸங்க குடும்ப அங்கத்தினர்களுக்கு | 11 |
| நீத்தாரைப்போல் திரி | 14 |
| ஒரு உன்னத உரையாடல் | 16 |
| செய்திகள் | 23 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 28 |
| மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை | 30 |
| பாரம்பரிய பொக்கிஷங்கள் | 32 |
| சைதன்ய மஹாப்ரபு | 34 |
| படித்ததில் பிடித்தது | 36 |


NO FAME
NO SELF INTEREST
ONLY GOD
NO NAME



# மதுரகீதம்

## குஞ்சிதபாதம் பஜேஹம்

**ராகம்:** ஸிந்துபைரவி

**தாளம்:** ஆதி

**பல்லவி**

**குஞ்சிதபாதம் பஜேஹம் - ஸதா**

**சரணம்**

**ரஞ்ஜித மனோஹர ஆனந்த ந்ருத்யம்**
**மஞ்ஜுள பாஷிணி அர்த்தாங்கம் (கு)**
**பஸ்மோத்தூளித மங்கள விக்ரஹம்**
**பதஞ்ஜலி வ்யாக்ரபாத அமோக தர்ஷனப்ரதம் (கு)**
**வ்யாக்ர சர்மாம்பராலங்க்ருதம்**
**வ்ருஷபாரூடம் அதிஸுந்தரம் (கு)**
**மன்மத தஹன லலாடாக்ஷம்**
**மார்கண்டேய லலாடாக்ஷர நாஷகம் (கு)**
**கங்காதர ஜடாதர சந்த்ரஷேகரம்**
**கபால மாலாதர ஷமஷான வாஸினம் (கு)**
**ம்ருத்யுஞ்ஜயம் அம்ருத கடேஸ்வரம்**
**ப்ருத்ய முரளீதர ஸதா பூஜிதம் (கு)**


---

**முன் அட்டை:**

**நாரத கான சபா**

**பின் அட்டை:**

**கல்பதரு தினம் மஹாமந்திர கூட்டுப்பிரார்த்தனை**



# மதுரமான மஹிமீயர்

(சென்ற இதழ் தொடர்ச்சி)
ஆஸ்திரேலியா அன்பர் கருணாமயி (Annette Williams) அவர்கள் பகிர்ந்து கொண்ட அனுபவங்களின் தொடர்ச்சியைப் பார்ப்போம்.

- Dr ஆ பாக்யநாதன்
ஸ்ரீ ஸ்வாமிஜியின் அந்தரங்க செயலாளர்

கருணாமயிக்கு அவருடைய தாயார் மேல் மிகுந்த அன்பு உண்டு. அவருடைய தாயார் முதிர்ச்சியின் காரணமாக நோய்வாய்ப்பட்டு, படுத்த படுக்கையாக பல மாதங்களாக இருந்தார். கருணாமயிக்கு தனது தாயாரின் அருகில் இருந்துகொண்டு, அவருடைய இறுதி காலத்தில் அவருக்கு சேவை செய்ய வேண்டும் என்பது ஒரு முக்கிய நோக்கமாக இருந்தது. அவ்வாறே அவரும் Sydneyல் அவருடைய தாயாருடன் இருந்து கொண்டு அவருக்கு சேவை செய்து கொண்டிருந்தார். அவருடைய தாயார் குருநாதரை தரிசித்ததும் இல்லை, குருநாதரிடமிருந்து உபதேசம் பெற்றுக் கொண்டதுமில்லை.

ஆனால், கருணாமயிக்கோ மனதில் எப்பொழுதும் ஒரு பிரார்த்தனை, ‘‘குருநாதா! என்னுடைய தாயாருக்கும் தங்களுடைய அருள் கிடைக்க வேண்டும்’’, என்பதுதான் அது. ஒவ்வொரு முறையும் இந்தியாவிற்கு வந்து குருநாதரை தரிசிக்கும் பொழுது தனது தாயாருக்காக குருநாதரிடம் பிரார்த்தனை செய்வார். ஏதாவது ப்ரஸாதம் வேண்டி பெற்றுக்கொண்டு தாயாரிடம் சென்று கொடுப்பார்.

2017ஆம் வருடம் ஜனவரி மாதம் ஒன்றாம் தேதி. அன்று காலை கருணாமயி ஆஸ்திரேலியாவிலிருந்து தொலைபேசி மூலம் என்னைத் தொடர்பு கொண்டு, ‘‘எனது தாயார் விஷயமாக குருநாதரிடம் மீண்டும் ஒரு முறை பிரார்த்தனை செய்து கொள்ள விரும்புகிறேன். மருத்துவர்கள் சொல்வதைப் பார்த்தால், சில வாரங்களோ சில மாதங்களோதான் அவர் உயிருடன் இருப்பார் என்பது போல் தோன்றுகின்றது. குருநாதரிடம் இந்த விஷயத்தை எனக்காக சமர்ப்பிக்கவும்’’, என்று கண்ணீர் மல்க தொலைபேசி மூலம் சொன்னார்.

நானும் உடனே ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் இந்த பிரார்த்தனையை தெரிவித்தேன். ஸ்ரீ ஸ்வாமிஜி உடனே பின்வருமாறு கருணாமயியிடம் தெரிவிக்கச் சொன்னார். ‘‘இறை நாமத்தை சொல்லக்கூடிய குழந்தைகளை பெற்றெடுக்கும் பாக்கியசாலிகளான பெற்றோர்களுக்கும் பகவானுடைய திருவடிகள் நிச்சயமாகக் கிடைக்கும் என்று எண்ணற்ற மஹான்கள் சொல்லி உள்ளார்கள். அதனால் கருணாமயியிடம் சொல், மஹாமந்திரக் கீர்த்தனம் செய்யக்கூடிய இந்த ஒரு மகளை பெற்றதனாலேயே அந்த்த தாய்க்கு ப்ரேமிக வரதன் தனது திருவடியைக் கொடுப்பான். உடனடியாக அவளது தாயாரின் வலது காதில் மஹாமந்திரத்தை மூன்று முறை சொல்லச் சொல்’’, என்று ஸ்ரீஸ்வாமிஜி மிகுந்த அவசரத்துடன் தொலைபேசி மூலம் உடனடியாக தெரிவிக்கச் சொன்னார். நானும் அவ்வாறே செய்தேன். ‘‘மருத்துவர்கள் என் தாயார் சில வாரங்களோ மாதங்களோ இருப்பார் என்றுதான் சொல்லியுள்ளார்கள்.

இப்பொழுதே சொல்ல வேண்டுமா, அல்லது சமயம் வரும்பொழுது சொன்னால் போதுமா?'', என்று கேட்டார். " ஸ்ரீஸ்வாமிஜி இப்பொழுது உடனே சொல்லச் சொன்னார்'', என்றவுடன் அவரும் மருத்துவமனைக்குச் சென்று மஹாமந்திரத்தை தாயாரின் வலது காதில் மூன்று முறை சொல்லிவிட்டு பிரார்த்தனை செய்தார்.

அச்சமயம், இந்தியாவில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் மஹாமந்திரக் கூட்டுப் பிரார்த்தனை கலெட்டிப்பேட்டையில் நடந்து கொண்டிருந்தது. ஆஸ்திரேலியாவில் அவர் தாயாரின் உயிர் பிரிந்து ஸ்ரீ ஸ்வாமிஜி சொன்னது போலவே க்ருஷ்ண சரணத்தை அடைந்து விட்டது. கருணாமயிக்கு குருநாதருடைய கருணையை எண்ணி எண்ணி அழுகைதான் வந்தது. குருநாதரை ஒரு முறை கூட நேரில் வந்து தரிசித்திடாத தாய்க்கு இப்படி ஒரு நல்ல கதி கிடைத்ததே என்று நினைத்து நினைத்து அவர் பூரிப்படைந்தார்.

அண்மையில் கருணாமயி ஆஸ்ரமத்திற்கு வந்திருந்த பொழுது குருநாதரிடம் சமர்ப்பிப்பதற்காக ஆசை ஆசையாக இரண்டு ஆஸ்திரேலிய மாம்பழங்களை எடுத்து வந்திருந்தார். குருநாதர் பாகவத பவனத்திற்கு வந்த பொழுது நமஸ்கரித்து அந்த இரண்டு மாம்பழங்களையும் குருநாதரிடம் கொடுத்தார். அந்தப் பழங்களைப் பார்த்து சிரித்துக் கொண்டே குருநாதர் சொன்னார், "எனக்கு இரண்டு மாம்பழங்கள் தெரியவில்லை. நான் பார்ப்பது பொறுமை, விடாமுயற்சி என்ற இரண்டு பழங்கள். பொறுமையுடனும், விடாமுயற்சியுடனும் நீ நாமம் சொல்லி வந்தால் நீ நிச்சயம் உன்னுடைய இலக்கை அடைவாய்'', என்று சொல்லி புன்முறுவல் பூத்தார். கருணாமயிக்கு மிகவும் சந்தோஷம். அவருக்கு இது மிகுந்த உற்சாகம் அளிக்கக்கூடிய ஒரு உபதேசமாக இருந்தது.

ஒரு மாலைப் பொழுதில் குருநாதர் ஆஸ்ரம மதுவனத்தின் திண்ணையில் அமர்ந்திருந்தார். அப்பொழுது கருணாமயி குருநாதரை நமஸ்கரித்து, "எனக்கு தங்களிடம் ஒரு சந்தேகம் கேட்க வேண்டும்'', என்று கேட்க, குருநாதரும், "என்ன சந்தேகம்? சொல்'', என்று கூறினார். "இந்த உலகம் பொய்யானது. மாதுரிஸகி சமேத ஸ்ரீ ப்ரேமிக வரதனும், குருநாதரும், குருநாதரால் உபதேசிக்கப்பட்டுள்ள இந்த மஹாமந்திரம் மட்டும்தான் மெய்.

இந்த மாய உலகினில் மாட்டிக்கொள்ளாமல் எப்பொழுதும் ஸ்ரத்தையுடனும் பக்தியுடனும் நாமத்தைச் சொல்ல வேண்டும். என்பதை நான் பல முறை எனது மனதிடம் சொல்லித்தான் வருகிறேன். ஆனால் அது ஒரு சமயம் போல் மற்றொரு சமயம் இருப்பது இல்லை. ஒரு சமயம் எப்பொழுதும் நாமாவை சொல்லிக்கொண்டிருக்கிறது. மற்றொரு சமயம், என்னை ஏமாற்றி உலகத்தை நோக்கி ஓடி விடுகிறது. ஏன் இப்படி நடக்கின்றது? எனக்கு இதற்கு பதில் தெரியவில்லை. நீங்கள்தான் சொல்ல வேண்டும்'', என்று கேட்டார்.

உடனடியாக சிரித்துக்கொண்டே ஸ்ரீ ஸ்வாமிஜி, ''இதற்கு பதில் தெரிய வேண்டுமா? இதற்கான பதிலைத்தான் நானும் தேடிக் கொண்டிருக்கிறேன். எனக்கும் தெரியவில்லை. நீ விடாமல் நாமம் சொல்லிக் கொண்டே இரு. நாமம் சொல்லிக் கொண்டே இருந்தால் இதற்கான பதில் தானாக உன்னை தேடி வரும். அப்பொழுது என்னிடம் வந்து அந்த பதிலைச் சொல்'', என்று சொல்லி கருணாமயியை அழைத்து அவரிடம் மூன்று பழங்களை ப்ரஸாதமாகக் கொடுத்தார். குருநாதர் நாம் எப்பொழுதும் நாம ஸங்கீர்த்தனம் செய்து கொண்டிருக்க வேண்டும் என்பதைத்தான் அப்படி அழகாக சொன்னார் என்று கருணாமயிக்கு நன்றாக புரிந்துவிட்டது. குருநாதர் கொடுத்த ப்ரஸாதத்தை பெற்றுக் கொண்டவுடன் கருணாமயியின் மனதில் ஒரு எண்ணம், ''பகவானிடம் பிரார்த்திக்க வேண்டிய மூன்று விஷயங்கள் - ஞானம், பக்தி, வைராக்கியம் என்று ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் சொல்வாரே. அதைத்தான் ஸ்ரீ ஸ்வாமிஜி இந்த மூன்று பழங்களாக எனக்கு அருளியுள்ளார்'' என்று அவருக்குத் தோன்றியது. மிகவும் சந்தோஷத்துடன் அந்த மூன்று பழங்களையும் பெற்றுக் கொண்டார் கருணாமயி.

அவர் மனதில் நினைத்ததை பிரதிபலிப்பது போல் குருநாதர் அடுத்த சில நாட்களிலேயே அவரை ஸ்ரீ ப்ரேமிக வரதனின் முன் நின்று அவரை பின் வருமாறு பிரார்த்தனை செய்யச் சொன்னார். ''ப்ரேமிக வரதா! இந்த உலகில் எனக்கு உன்னைத் தவிர வேறு எதுவும் வேண்டாம். வேறு எதையும் நான் விரும்பவில்லை. இந்த மாயையில் நான் மாட்டிக் கொள்ளாமல் நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும். எனக்கு உயர்ந்த ஞானம், பக்தி, வைராக்கியத்தை நீதான் அருள வேண்டும்'', என்பது தான் அந்தப் பிரார்த்தனை.

# நான்கு சம்பாஷணைகள் - 3

**அன்பர்:**
**க்ருஷ்ண பக்தி என்னும் பாதையில் செல்லும் பலர், ஆதி சங்கரரை ''மாயாவாதி'' என்கிறார்களே!...**

**ஸ்ரீ ஸ்வாமிஜி:**
**அவர்கள் ஸ்ரீ ஆதி சங்கரரை சரியாகப் புரிந்துகொள்ளாததால் அப்படிச் சொல்கிறார்கள். அவர்கள் ஸ்ரீ ஆதி சங்கரரின் நூல்கள் எதையுமே ஆழ்ந்து படித்திருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அவரது மிக முக்கியமான க்ரந்தம் ''ப்ரபோத சுதாகரம்'' ஆகும். அவரது எல்லா வேதாந்த பரமான க்ரந்தங்களுள் இந்த கிரந்தத்தில் ஸகுண பிரம்மம் மற்றும் நிர்குண பிரம்மம் இரண்டின் ஐக்யத்தைச் (இரண்டும் ஒன்றே என்பதை) சொல்லியிருக்கிறார். அந்த கிரந்தத்தில் ஸ்ரீ கிருஷ்ணனே பரதெய்வம் என்பதையும் தெளிவாக வெளியிட்டிருக்கிறார். அவரா மாயாவாதி? இல்லவே இல்லை. உண்மையில் அவர் உன்னத பிரம்ம வாதியே!**
**அவர் மாயை என்று ஒன்று இருப்பதாக ஒத்துக்கொள்ளவே இல்லை. அனைத்தும் பிரம்மம் என்றுதான் சொல்லியிருக்கிறார்; பிரம்மம் மட்டுமே தான் இருக்கிறது என்கிறார்! ''ஹரி மீடே'' என்ற ஒரு ஸ்தோத்ரத்தைப் பார்த்தால், அவர் எத்தகைய உயர்ந்த கிருஷ்ண பக்தர் என்று தெளிவாகத் தெரியும்.**

திருவிசைநல்லூரில் ஸ்ரீராம சுப்பா சாஸ்த்ரிகள் என்று ஒரு மகான் இருந்தார். அவர் ஆதி சங்கரரின் அத்தனை நூல்களையும் மிக ஆழமாக ஆராய்ச்சி செய்துவிட்டு, ஆதிசங்கரர் ஒரு தீவிர வைணவர் என்று சொல்கிறார். இந்தத் தத்துவத்தை மையமாகக் கொண்டு சாஸ்திரிகளே பல கிரந்தங்களை செய்திருக்கிறார். புரிகிறதா?

அன்பர்:
ஸ்ரீ ஸ்வாமிஜியை வணங்கிவிட்டு, மிக நன்றாய்ப் புரிகிறது, ஸ்வாமிஜி. இப்படிப்பட்ட ஆசார்ய புருஷரை நிந்தை செய்வது எவ்வளவு பெரிய அபசாரம்? ‘‘பகவான் தனக்கு அபசாரம் செய்தால்கூடப் பொறுத்துக் கொள்வான். ஆனால், இத்தகைய மகான்களுக்கு நிகழும் அபசாரங்களைப் பொறுத்துக் கொள்ளவே மாட்டான்’’ என்று நான் கேள்விப் பட்டிருக்கிறேன். விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்கு ஸ்ரீ ஆதி சங்கரர் எழுதிய விரிவான விளக்க உரை, கிருஷ்ணாஷ்டகம், கோவிந்தாஷ்டகம், பஜ கோவிந்தம், பண்டுரங்காஷ்டகம், யமுனாஷ்டகம், கங்காஷ்டகம், ராம புஜங்க ஸ்தோத்ரம் இவை அனைத்தையும் பார்த்தால், ஆதி சங்கரர் கண்ணனின் மீது எவ்வளவு ப்ரேமை வைத்திருந்தார் என்பது நன்றாகப் புலப்படுகிறது. இவ்வளவு நாட்களாக இதைப்பற்றி யோசிக்காமல் இருந்துவிட்டேன். நான் இப்படிப்பட்ட மகா புருஷருக்கு அறிந்தோ அறியாமலோ அபசாரப்பட்டிருந்தால் பகவான் கிருஷ்ணன் அடியேனை மன்னிக்கட்டும். என்றுகூறி மீண்டும் நமஸ்காரம் செய்தார். பின்னர், ‘‘ஸ்வாமிஜி! கடைசியாக ஒரே ஒரு கேள்வி..’’ என்றார்.

# அன்புள்ள ஸத்ஸங்க குடும்ப அங்கத்தினர்களுக்கு

## ஸ்ரீ ஸ்வாமிஜி

அன்புள்ள என்னுடைய ஸத்ஸங்க குடும்ப அங்கத்தினர்களுக்கு அநேக ராதே! ராதே! இந்த புது வருடம் உங்களுடைய வாழ்வில் பல நன்மைகளை கொண்டு வருவதாக அமையட்டும். திண்டுக்கல் கோட்டை மாரியம்மன் வளாகத்தில் இந்தவருட முதல் நாள் கூட்டுப் பிரார்த்தனை மிகவும் நன்றாக நடந்தது. பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் அனைவரும் கைகளை உயரே தூக்கி ஆனந்தமாக மஹாமந்திரம் சொன்னார்கள். பார்ப்பதற்கு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. காதில் தேன் பாய்ந்தது. மனதில் ஆனந்தம். ‘‘வாழ்வில் ஒரே ஒரு முறையாவது மஹாமந்திர கீர்த்தனம் செய்பவர்கள் கூட பாக்யசாலிகள்’’ என்று சைதன்யர் கூறியிருப்பதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள் அல்லவா! என்னுடைய மகிழ்ச்சிக்காக நீங்கள் உங்களது ஊரில் தினமும் அதிகாலையில் எழுந்து நீராடி, மற்ற பக்தர்களையும் எழுப்பி, அவர்களையும் உற்சாகப்படுத்தி நாம கீர்த்தனம் வீதியில் அழகாக செய்து வருகின்றீர்கள். உங்கள் அனைவருக்கும் என்னுடைய ஆசிகள்.

8.11.2017ஆம் தேதி அன்று பெரியகுளம் ‘நாமத்வார்’ திறக்கப்பட்டு மிகவும் அழகாக செயல்பட்டு வருகின்றது. இதில் திருமதி லதா, திருமதி விஜயராணி பெரும் பங்களித்துள்ளனர். விடாமல் நாமம் நடந்து கொண்டிருக்கிறது. பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப் படுகின்றது. சைதன்யதாஸ் பத்மாவதியின் முழு குடும்பமே சேவை செய்கின்றது. ‘நாமத்வாரும்’ பிரம்மாண்டமாகவும், அதே சமயத்தில் அழகாகவும் மிளிர்கின்றது. மதுரை நாமத்வார் வேலை நடந்து வருகின்றது. இதற்காக ஸ்வாமிநாத ஐயர் குடும்பத்தினர் சேவை செய்து வருகின்றார். தூத்துக்குடி நேரு அவர்கள் தன்னை இதில் முழுவதுமாக

ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். லக்ஷ்மிகாந்தன் அவர்கள் முயற்சியால் காரியாபட்டி 'நாமத்வார்' வேலை நடந்து வருகின்றது. விருதுநகர் காந்தீசன் நாமத்வார் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். சேங்கனூரில் இரண்டு 'நாமத்வார்' ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

அடுத்ததாக அம்பாசமுத்திரம், திருமதி.பிரமிளா & உடுமலை ஸத்ஸங்க அன்பர்களால் உடுமலைப்பேட்டையிலும் 'நாமத்வார்' அமைவதற்கு நிலங்கள் வாங்கப்பட்டுவிட்டன. அவைகளில் அடுத்ததாக கவனம் செலுத்த வேண்டும். அருப்புக்கோட்டை ஸ்ரீசிவராம் கணேஷ் அவர்கள் தனக்கு சொந்தமான இடத்தை நாமத்வார் அமைய வேண்டி கொடுக்க வேண்டும் என்று துரத்திக் கொண்டிருக்கிறார். இதற்கான ஆயத்த பணிகளில் ஸ்ரீகண்ணன் மற்றும் ஸத்ஸங்க அன்பர்கள் உதவி வருகின்றனர்.

தஞ்சாவூரில் விஜய் என்ற பக்தர் தன்னுடைய கடுமையான உழைப்பினால் சேமித்த பணத்தைக் கொண்டு சொந்தமாக ஒரு இடம் வாங்கி 'நாமத்வார்' வரவேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கின்றார். ஐநூறு வருடங்களுக்கு முன்பாகவே நாமம்தான் கதி என்றார் மஹாப்பிரபு. இன்றும் அதை புரிந்து கொள்ளாமல் மக்கள் துயரத்தில் விழுகின்றனர். நாம் பாக்யசாலிகள்!!

Melbourne (Australia) நாமத்வார் சுப்பு, வித்யா அவர்கள் முயற்சியால் கட்டப்பட்டு மிகவும் நன்றாக நடந்து வருகின்றது. Atlanta (US) கிஷோர் அவர்கள் இரவுபகலாக 'நாமத்வார்' தியானத்திலேயே இருப்பார். அவருடைய முயற்சியால் 8.11.2017 நாமத்வார் உருவானது. Dallas நாமத்வார் உருவாகி வருகின்றது. Virginia நாமத்வார் உருவாகி வருகின்றது. Fiji மற்றும் New Zealand-லும் நாமத்வார்கள் உருவாகி வருகின்றன. Dallas (US) மாயாஜி ஜயந்தி தம்பதிகள் எப்பொழுதும் 'நாமா', 'நாமா' என்றுதான் மூச்சுவிடுகின்றனர். அவர்கள் Dallas நாமத்வார் வர ஆயத்த பணிகளை தொடங்கிவிட்டார்.

வெர்ஜினியா (US) முரளி, மாலதி, ராமன் அவர்கள் 'நாமத்வார்' அமைய வேண்டும் என்பதற்காக தூங்குவதே இல்லை. அதற்கான ஆயத்த பணிகளும் நடந்து வருகின்றது. தீபக் வினோத்,

**நிவேஷ், ராஜ், அமான், ஸ்வஸ்திகா மற்றும் Fiji அன்பர்களுக்கு, Fiji தீவில் நாமத்வார் அமைய வேண்டும் என்பதே லட்சியம். New Zealand வெங்கட்-கவிதா, விஜய்-பவித்ரா அந்நாட்டில் நாமத்வார் அமைய எடுக்கும் முயற்சிகளோ சொல்லில் அடங்காது.**

**சுவாரஸ்யமான ஒரு விஷயமும் உள்ளது. ராமுஜி அவர்கள் தன் சொந்த பணத்தில் Moon and Mars-ல் நாமத்வார் கட்டுவதற்காக இடம் முன்பதிவு செய்துள்ளார்.**

**யார் என்ன சொன்னாலும் நான் கவலைப்படுவதில்லை, எனக்கு நீங்கள் இருக்கின்றீர்கள் நமக்கு நாமா இருக்கின்றது. தொடர்ந்து நாமம் சொல்லுவோம்; சொல்ல வைப்போம். 'நாமத்வாரின்' உண்மையான சேவையை வருங்கால உலகம் நன்றாக பயன்படுத்திக் கொள்ளும். எல்லாம் குரு க்ருபை!!**

**- குடும்பத் தலைவன்**
**முரளீதர ஸ்வாமிஜி**




# நீத்தாரைப் போல் திரி

ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீ சுகர் அருமையிலும் அருமையான பகவத் விஷயங்களைப் பொழிகின்றார். இவை அனைத்திற்கும் ராஜா பரீக்ஷித் கேட்ட முதல் கேள்வியே ஒரு முக்கிய காரணமாக அமைந்தது. ''எதை கேட்க வேண்டும்? எதை ஜபிக்க வேண்டும்? எதை நினைக்க வேண்டும்? எதை பார்க்க வேண்டும்? எதை செய்ய வேண்டும்? எவற்றை தவிர்க்க வேண்டும்?'' என்ற அவனது முதல் கேள்வியை ஸ்ரீசுகரே கொண்டாடுகிறார்.

''ராஜாவின் அழகான கேள்விகளே ஸ்ரீ சுகரின் அருமையான பதில்களுக்கு ஒரு முக்கிய காரணம்'' என்று ஸ்ரீ ஸ்வாமிஜி சொல்வதுண்டு.

இந்தோநேஷியாவிலிருந்து வந்த ஒரு சத்சங்க அன்பர், அழகான ஒரு கேள்வியை ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் கேட்டார். அதற்கு அருமையான பதிலை ஸ்ரீஸ்வாமிஜியும் அளித்தார்.

'நான் இறந்துவிட்டேன்' என்ற நினைவோடு வாழ கற்றுக் கொள், அப்பொழுதுதான் உனக்கு மகிழ்ச்சி நிலை. இதனுடைய உண்மை பொருள் என்ன? ஸ்ரீ ஸ்வாமிஜி சந்தோஷமாக பதிலளிக்கத் தொடங்கினார், "இவ்வாறான தத்துவங்களை வேதாந்தத்தில் நிறைய சொல்வார்கள். தமிழ் வேதாந்தத்தில் 'நீத்தாரைப் போல் திரி' என்று என்று உள்ளது. 'நீத்தார்' என்றால் இறந்து போனவர்கள். திரி என்றால் இவ்வுலகத்தில் உழல்வது.

உலக நிகழ்வுகளில் எது தங்களை பாதிக்கின்றது? என்னென்ன பிரச்சனைகள் பாதிக்கின்றன? நீங்கள் காலையில் எழுந்ததிலிருந்து, தொலைக்காட்சியில் வரும் செய்திகளோ, நாளிதழ்களில் வரும் செய்திகளோ, அல்லது தங்களது குடும்பத்தில் இருக்கும் அன்றாட பிரச்சனைகளோ, இவ்வனைத்தும் ஒரு மகிழ்ச்சியையோ கவலையையோ ஏற்படுத்துகின்றன. இத்தகைய சூழலில், நேற்றே நான் இறந்துவிட்டேன் என்று தங்களுக்குள்ளேயே நினைத்துக் கொள்ளுங்கள். நான் இறந்துவிட்டேன் எனில், மேற்கண்ட விஷயங்கள் என்னை பாதிக்குமா? இவையனைத்தும் எனக்குள் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்திவிடப் போகிறது?

சற்று சிந்தித்துப் பாருங்கள், தங்களுடைய நெருங்கிய நண்பர் அல்லது உறவினர் எவரேனும் 2-3 நாட்களுக்கு முன்போ, 1-6 மாதங்களுக்கு முன்போ இறந்துவிட்டார். நாம் காணும் இந்த தொலைக்காட்சி செய்திகளோ, நாளிதழ் செய்திகளோ, உலக நிகழ்வுகளோ, அந்த இறந்த நபருக்கு என்ன பாதிப்பை ஏற்படுத்தும்? ஒன்றும் ஏற்படுத்தாது அல்லவா? ஏன்? அவற்றை கவனிக்கவோ செவி மடுக்கவோ கூட அவர் இப்பொழுது இல்லை. "நானும் அந்நிலையில் உள்ளேன்", என நினைத்துக் கொள்ளுங்கள். "இவ்வுலக நிகழ்வுகளைப் பொறுத்தவரை இறந்தவனாவேன்", என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த அளவிற்கு நாம் அவற்றால் பாதிப்படையக் கூடாது.

தங்கள் உடலிலோ சுற்றுச் சூழலிலோ நிகழ்பவைகள், உணர்வுகளை கிளர்ந்தெழச் செய்யும். அவ்வுணர்வுகள் தாம் தங்கள் மனதைப் பாதிக்கின்றது. அதனால், உணர்வுகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

நாம் ஸ்ரீ க்ருஷ்ணரைத் தொழுகின்றோம். ஸ்ரீ க்ருஷ்ணர் ஞானிக்கெல்லாம் ஞானியும் மிகப் பெரிய யோகியுமாவார். அவர் எதனாலும் பாதிப்படையவே மாட்டார். அவரை பூஜை செய்து வருவதால், நாமும் எவற்றாலும் பாதிப்படையாத ஒரு நிலையை அடைந்துவிடுவோம். அதற்குதான் "உபாஸனை"! நாமும் அவரைப் போன்றே ஆகிவிடுவோம் எனில், அவரைப் போன்று மயில்பீலி, பீதாம்பரம், வைஜயந்தி மாலையோடுள்ள தோற்றமல்ல. (தொடரும்)

[ஜூலை 26-ஆம் தேதி சென்னையில் வளைகுடா நாடுகளிலிருந்து ஸத்ஸங்கத்திற்கு வந்த பக்தர்களுடன் ஸ்ரீஸ்வாமிஜி ஸத்ஸங்கம் நிகழ்த்தினார்கள். அதில் ஒரு உன்னத உரையாடல்! ஒரு அன்பர் பிற மத வழிபாடுகள் செய்யலாமா என்று கேட்ட கேள்விக்கு ஸ்ரீஸ்வாமிஜி அன்போடு அழகாக விரிவாக உரைத்த பதிலின் இரண்டாம் பாகம்]

இப்போது உங்கள் கேள்விக்கு வருவோம்! நமது இலக்கு ஒன்றே! இருந்தாலும் அதற்க்கான பாதைகள் பல! ஒவ்வொரு பாதையும் நமது சரீரத்தில் ஒரு ரஸாயன மாற்றத்தை (chemistry) ஏற்படுத்துகின்றது! நீங்கள் கேட்கலாம் - 'அப்படியென்றால் அந்த மாற்றத்தை நான் ஏன் உணரவில்லை?' என்று. அதற்கான காரணம், இம்மாற்றங்கள் மிகவும் சூக்ஷ்மமான அளவிலேயே ஏற்படுகின்றன (changes are very subtle). ஆனால் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பது சத்தியம் தான். ஒருவர் ப்ராணாயாமம் செய்கின்றார் என்றால் ஒரு நுண்ணிய மாற்றம் அவருள் ஏற்படுகின்றது.

# ஒரு உன்னத உரையாடல்

- M.K. ராமானுஜம்

நித்ய கர்மங்களை அனுஷ்டிக்கும் ஒருவருக்கு வேறு ஒரு சூக்ஷ்மமான மாற்றம் ஏற்படுகின்றது. அந்தந்த ஸாதனையில் நாம் முன்னேறிக் கொண்டிருக்கும்போது, அந்தந்த நுண்ணிய மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஒவ்வொரு பாதையின் 'ரஸாயன' மாற்றங்கள் (chemistry) வெவ்வேறானவைகள். ஆகவே பக்தியில், அதிலும் உதாரணத்திற்கு கண்ணன் பால் பக்தி - என்ற மார்கத்தில் சென்று கொண்டு, அதனால் ஏற்படும் நுண்ணிய மாற்றங்களால் முன்னேறி, ப்ரேமபக்தி ஏற்படும். ஞானம், வைராக்கியம் என்ற பூரண நிலையை அடைய வேண்டும்.

இப்போது யோகத்தில் (பதஞ்சலி மார்க்கம்) ஒருவர் முன்னேறிக் கொண்டிருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம்; அவர் பக்தி செய்யும் ஒரு

சாதகரைத் தொட்டு தொட்டு பேசினால் கூட ஒரு குழப்பம் ஏற்பட்டு விடும். ஏனென்றால், தொடுவதாலேயே மனதளவில் தனது எண்ணங்களை வலிமையானவரால், வலிமைகுறைவாக இருக்கும் மற்றொருவருக்கு புகட்ட முடியும். எப்பொழுதும் உலக வாழ்க்கையிலே உழலும் ஒருவருடன் அதிகம் பழகுவதால், ஆன்மீக வாழ்க்கையில் பயணிக்கும் நமது மனதில் பெரிய பாதிப்பு ஏற்படக்கூடும்.

ஆகவே, உண்மையை பூரணமாக உணரும் வரை, ஒரே பாதையில் திடமாக பயணிப்பதே உத்தமம். விரைவில், கஷ்டப்படாமல் இலக்கையடைய இது உதவும். இந்த பிறவியிலேயே இறைவனை அடைய வேண்டும் என்று விருப்பப்படும் ஸாதகராக நீங்கள் இருக்கிறீர்களானால், மறுமுறை பிறப்பு - இறப்பு என்ற சூழலில் விழக் கூடாது என்று இருப்பீரானால் பாதை என்ன? எவ்வாறு பயணிப்பது? இலக்கு என்ன என்பதில் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும். அங்கும் இங்கும் திரியக்கூடாது.

ஒருமுறை, ஒரு பிரபல இசைக் கலைஞர் யோகி ராம் சுரத்குமார் அவர்களைப் பார்க்க வந்தார். சிறிது காலம் வந்த வண்ணம் இருந்தார். பிறகு அருகில் இருந்த மற்றொரு மகானின் ஆஸ்ரமம் செல்ல ஆரம்பித்தார். ஏதாவது ஒரு கோவிலைப் பற்றி தெரிந்தால் அங்கு செல்ல ஆரம்பித்து விடுவார். இப்படி அங்கும் இங்கும் அலைந்து பல மாதங்களுக்குப் பின்னர் திரும்ப யோகி ராம் சுரத்குமாரிடம் வந்தார் அந்தக் கலைஞர். அப்போது யோகி ராம் சுரத்குமார் மஹராஜ், அவரைப் பார்த்து, "If you want punya you can go to many places. But if you want liberation you should stick to one Guru. It need not be this beggar." (உனக்கு புண்ணியம் வேண்டும் என்றால் நீ பல இடங்களுக்கு செல்லலாம். ஆனால் முக்தி வேண்டும் என்றால் ஒரு குருவிடமே செல்ல வேண்டும். அந்த குரு இந்த பிச்சைக்காரனாக இருக்க வேண்டும் என்பதில்லை. உன் மனதிற்கு யார் நல்ல குரு என்று தோன்றுகிறதோ, உனக்கு யாரை பிடித்திருக்கிறதோ, அவரையே நீ குருவாக வரிக்கலாம். ஆனால், ஒரே குருவிடம் மட்டுமே இருக்க வேண்டும்). இந்த போதனை அந்த இசைக் கலைஞருக்கு மட்டும் அல்ல! நம் அனைவருக்கும் தான்!

ஒரு குழந்தை தன் தாயின் பாலைக் குடிக்குமே தவிர வேறு தாயின் பாலையா குடிக்கும்? Grace should come from the master himself! க்ருபை என்பது தன் ஸத்குருநாதரிடமிருந்து தானே வரவேண்டும்!

இது சம்பந்தமாக மற்றொரு சம்பவம். ஸ்ரீராமக்ருஷ்ண பரமஹம்சர் காசிப்பூர் தோட்டத்தில் இருந்து கொண்டிருந்த காலம் புற்று

நோயால் அவரது சரீரம் எலும்பும் தோலுமாகவே இருந்தது. அவரால் நடக்கக் கூட முடியவில்லை. அந்த கால கட்டத்தில் அவரது முக்கிய சீடர்கள் பலர் அவருடனேயே வாழ்ந்து வந்தனர். அப்போது ஒரு நாள் ஸ்வாமி விவேகானந்தரும், ஸ்வாமி அகண்டானந்தரும் ஓரிடத்தில் த்யானம் செய்து வந்தனர். சுவாமி விவேகானந்தருக்கு த்யானத்தில் தன்னுள் ஒரு பெரிய தெய்வீக சக்தி பெருகி வருவது தெரிந்தது. தான் என்ன செய்கின்றோம் என்று கூட தெரியாமல் அருகில் இருந்த அகண்டானந்தரை தொட்டார். அவருக்கு ஒரு பெரிய சக்தி புகுந்ததுபோல் ஒரு அனுபவம். சில காலம் கழித்து இருவரும் மாடியில் ஸ்ரீராமக்ருஷ்ண பரமஹம்சரை தரிசனம் செய்யச் சென்றனர். ஸ்ரீராமக்ருஷ்ணரும் சுவாமி விவேகானந்தரைப் பார்த்து, "இவனை இப்படி கெடுத்து விட்டாயே!" என்றார். "ஏன் என்றால் உன்னை ஒரு வழியில் செல்ல சொல்லிக் கொடுத்துள்ளேன்; அவனை வேறு வழியில் செல்ல சொல்லிக் கொடுத்தேன்! உன் பாதையில் நீ செல்லும் divine power (தெய்வீக சக்தியை) அவனிடம் செலுத்தியதால், அவனுள் நான் தயார் செய்து வந்த தெய்வீக கர்ப்பம் கலைந்து விட்டது!", என்று சொன்னார்.

இதுபோன்று நுட்பமான விஷயங்களும், மாற்றங்களும் யாருக்குத் தெரியும்? ஆரம்ப நிலையில் இருக்கும் சாதாரண ஜனங்களுக்கு தெரியவே தெரியாது. ஒரே மார்க்கத்தில் நிலைத்திருந்து, திடமாக செல்லும் உயர்நிலை சாதகர்களுக்கு மட்டுமே தெரியும். ஆகவே பக்தி செய்வதால் ஏற்படும் chemistry (ரசாயனம்) வேறு; யோகத்தில் ஏற்படும் chemistry வேறு! கலப்பு ஏற்பட்டால் குழப்பம் தான்...

(தொடரும்)

HUMBLE PRANAMS AT
THE LOTUS FEET OF GURUJI
DR SHRIRAAM MAHADEVAN
Consultant Endocrinologist
Endocrine & Speciality Clinic
Sri Ganesh Flats, Flat No 4, Ground floor,
Old no.72, New No 460, TTK Road, Alwarpet, Ch - 18
Tel: 044-24350090, Mob: 9445880090
Email: mshriraam@gmail.com,
www.chennaiendocrine.com




மதுர கீதம் பஜனை போட்டி, நாரத கான சபா, 7 January



Student Mass Prayer, Kamarajar Arangam 6 January



**பூர்ணிமாஜியின் சத்சங்கங்கள்: Discourse on Practical Path to Happiness and Sundarakandam at Maine and Rhode Island; Madhura Utsavam at Houston Namadwaar**

**ஸ்ரீ முரளிஜியின் மாணவ மாணவியருக்கான கூட்டுப் பிரார்த்தனை**



# செய்திகள்

தொகுப்பு: ஸ்ரீ சிவராமன்

**டிசம்பர் 15 ஆம் தேதி முதல் ஜனவரி 14-ஆம் தேதி வரை -**

**மதுரபுரி ஆஸ்ரமத்தில் மாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு அதிகாலையில் தனுர் மாத பூஜை நடைபெற்றது.**

**ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன் GOD India Trust சார்பில் எல்லா நாமத்வார்களிலும் மற்றும் கேந்திராக்களிலும் இவ்வருடமும் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு மிகவும் பிடித்த மஹாமந்திர கீர்த்தனத்துடன் வீதி பஜனை நடைபெற்றது. பக்தர்கள் தங்கள் ஊர்களிலும், கிராமங்களிலும் எல்லோரும் வளமாக வாழ வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் வீதி பஜனை செய்தார்கள்.**

**டிசம்பர் 18 -ஆம் தேதி முதல் 25-ஆம் தேதி வரை**

**மதுரபுரி ஆஸ்ரமத்தில் மாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் அத்யயன உத்ஸவம் நடைபெற்றது. திருநாங்கூர் ஸ்ரீமதி ஜயந்தி ஜானகிராமன் நினைவு திராவிட வேத ஆகம பாடசாலை முதல்வர் ஸ்ரீ S.ராம்குமார் மற்றும் பாடசாலை வித்யார்த்திகள் கலந்துகொண்டார்கள். அத்யயன உத்ஸவ பூர்த்தி தினத்தன்று ஆண்டாள் திருக்கல்யாணம் நடைபெற்றது.**

**வைகுண்ட ஏகாதசி**

**டிசம்பர் 29-ஆம் தேதி வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு மதுரபுரி ஆஸ்ரமத்தில் அதிகாலை தனுர் மாத பூஜையும், காலை 8 மணிக்கு மாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் கருட சேவையும் நடைபெற்றது. எண்ணற்ற பக்தர்கள் வந்திருந்து கருட சேவையை கண்டு களித்தனர். ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் இருந்து பிரசாதம் பெற்றுக்கொண்டனர். அன்று இரவு முழுவதும் நமது GOD India Trust சார்பில் சென்னை மேலமாம்பலம் பாணிக்ரஹா கல்யாண மண்டபத்தில் அகண்ட மஹாமந்திர கீர்த்தனம் நடைபெற்றது.**

ஜனவரி 1-ஆம் தேதி

குருதேவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் கல்பதரு தினத்தை ஒட்டி, 2007 முதல் ஒவ்வொரு வருடமும் ஜனவரி 1-ஆம் தேதியன்று GOD India Trust சார்பில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் மஹாமந்திரக் கூட்டுப்பிரார்த்தனை மற்றும் சத்சங்கம் நடைபெற்று வருகின்றது. இந்த ஆண்டு ஜனவரி 1 - ஆம் தேதியன்று, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் கூட்டுப்பிரார்த்தனை, திண்டுக்கல், கோட்டை மாரியம்மன் திருக்கோயில் வளாகத்தில் மாலை 5 மணி முதல் நடைபெற்றது. 'நாம திருவிழா - நம்ம திருவிழா' என்று பெயர் சூட்டப்பட்ட இந்தக் கூட்டுப்பிரார்த்தனையில் சுமார் 10,000 அன்பர்கள் கலந்துகொண்டு பயனடைந்தார்கள். மாலை 5 மணிக்கு GOD Australiaவைச் சேர்ந்த Sydney Namadwaar அன்பர்கள் பல்வேறு இசைக் கருவிகளுடன் நாமகீர்த்தனம் செய்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அந்தரங்க செயலாளர் ஸ்ரீ பாக்யநாதன்ஜி அவர்கள் வரவேற்புரை அளித்து நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், தமது அருளுரையில் நாம மஹிமை, கூட்டுப் பிரார்த்தனையின் பலம் இவற்றை அவருக்கே உரிய பாணியில் உபன்யாசம் செய்து அருளினார்கள். இந்த மஹாமந்திரக் கூட்டுப் பிரார்த்தனைக்கு தமிழ்நாட்டின் பல இடங்களில் இருந்தும், இந்தியாவின் பிற மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளிலிருந்தும் எண்ணற்ற பக்தர்கள் வந்திருந்தனர். உலகம் முழுவதிலும் உள்ள அன்பர்கள் இதை கண்டு பயனடைய webcast ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. Webcast மூலம் ஏறத்தாழ ஒரு லட்சம் அன்பர்கள் கண்டு களித்தனர். கூட்டுப் பிரார்த்தனையின் பூர்த்தியில் அமைதியாக அனைவரும் பிரார்த்தனை செய்ய, பிறகு, ஆயிரக்கணக்கானோர் ஒன்றாக மஹாமந்திரத்தை ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுடன் சேர்ந்து கீர்த்தனம் பாடினார்கள். கூட்டுப் பிரார்த்தனைக்கான ஏற்பாடுகளை செவ்வனே ஒருங்கிணைத்து செய்திருந்த திரு. ரவி செந்தில்குமார் அவர்கள், GOD India Trust சார்பாக நன்றியுரை வழங்கினார்.

ஜனவரி 6 - சென்னை யோகி ராம்சுரத்குமார் ஸத்ஸங்க ஸமிதி சார்பில், ஔவை ஷண்முகம் சாலை, சென்னை இராயப்பேட்டையில் உள்ள நல்வாழ்வு கல்யாண மண்டபத்தில் யோகி ராம்சுரத்குமார் ஜயந்தி உத்ஸவம் கொண்டாடப் பட்டது. இதில், மாலை 5.30 மணியளவில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டு உபன்யாசம் செய்தார்.

ஜனவரி 6 - GOD India Trust சார்பில், பதினொன்றாவது ஆண்டு பள்ளி மாணவ மாணவியர்களுக்கான மாபெரும் கூட்டுப் பிரார்த்தனை சென்னை, காமராஜர் அரங்கத்தில் நடைபெற்றது. இதில், ஸ்ரீ பாக்யநாதன்ஜி மற்றும் ஸ்ரீ ராமானுஜம்ஜி கலந்து கொண்டு மாணவ மாணவியர்களை ஊக்குவித்து உரையாற்றினார்கள். இரண்டு பகுதிகளாக நடைபெற்ற இந்தக் கூட்டுப் ப்ரார்த்தனையில் 4500கும் மேற்பட்ட மாணவ மாணவியர் கலந்துகொண்டனர்.

GOD India Trust அறங்காவலர்கள் Dr. ஜனனீ வாஸுதேவன், ஸ்ரீ விக்னேஷ் சுந்தரராமன் வரவேற்புரை மற்றும் நன்றியுரை நவின்றார்கள். Founder Trustee ஸ்ரீ K. சத்யநாராயணன் கலந்துகொண்டு, மிகப்பெரிய அளவில் நடைபெறும் இந்தக் கூட்டுப் பிரார்த்தனைக்கு ஒவ்வொரு வருடமும் உறுதுணையாக இருக்கும் Lead Sponsor - SASTRA University Dean Prof. Dr. VAIDYA SUBRAMANIAM அவர்களை கௌரவித்து அவரது பணியினை பாராட்டி பேசினார்கள். பூர்த்தியில் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் தங்களது அனுபவங்களை பகிர்ந்துகொண்டார்கள்.

மாணவ மாணவியர்களுக்கான கூட்டுப்பிரார்த்தனையை ஸ்ரீ முரளிஜி பல ஊர்களிலும் கிராமங்களிலும் நிகழ்த்தி வருகின்றார்கள். வருடா வருடம் இந்த இரண்டு மாதங்களில் சுமார் ஒரு லக்ஷம் மாணவ மாணவியர் இதில் கலந்துகொண்டு பயனைடைகின்றனர்.

ஜனவரி 7 முதல் ஜனவரி 13 வரை காலை சென்னை ப்ரேமிகபவனத்தில் கீர்த்தனாவளி உத்ஸவம் கொண்டாடப்பட்டது.

ஜனவரி 7 முதல் ஜனவரி 13 வரை

சென்னை நாரத கான சபா, ஸ்ரீ ஞானானந்தா ஹாலில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் ஸ்ரீமத் பாகவத உபன்யாசம் மாலை 6.30 மணி முதல் 8.30 வரை நடைபெற்றது. எல்லா நாட்களும் அரங்கம் நிறைந்து வழிந்தது. இதில் எண்ணற்ற அன்பர்கள் கலந்து கொண்டு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் உபன்யாசத்தில் முக்கியமாக நாரத வியாச ஸம்வாதம், துருவ சரித்ரம், அஜாமிள சரித்ரம், ப்ரஹ்லாத சரித்ரம், வாமன அவதாரம், அம்பரீஷ சரித்ரம், ருக்மிணி கல்யாணம் இவற்றை மெய் மறந்து கேட்டு பரமானந்தம் அடைந்தனர்.

**ஜனவரி - 7 மதுரகீதம் - பஜனை போட்டி பரிசளிப்பு விழா**

GOD India Trust சார்பில் இந்த ஆண்டு பஜனை போட்டியின் தகுதிபோட்டி மற்றும் இறுதி போட்டி டிசம்பர் மாதம் நடைபெற்றது. இறுதி போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சென்னை நாரத கான சபாவில், மாலை 5 மணியளவில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், தமது திருக்கரங்களினால் பரிசுகளை வழங்கி அருளாசி வழங்கினார்கள். Trustee Dr. Janani Vasudevan மற்றும் அணியினர் மதுரகீதம் பஜனை போட்டியை ஒருங்கிணைத்து திறம்பட நடத்தினர். நூற்றுக்கணக்கான பள்ளிகளில் இருந்து இந்த பஜனை போட்டியில் கலந்துகொண்டனர்.

ஜனவரி 14ஆம் தேதி - மகர சங்கராந்தி - பொங்கல் பண்டிகை சென்னை ப்ரேமிகபவனத்தில் காலையில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் கொண்டாடப்பட்டது.

**ஜனவரி 15 முதல் ஜனவரி 25 வரை**

சேங்கனூர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயில் ப்ரஹ்மோத்ஸவம் ‘மஹாத்மா’ ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் அருளாசியுடன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. காலையில் சிவ்விகையில் ஸ்ரீ சக்ரபாணி ஸ்வாமி புறப்பாடு கண்டருளினார். மாலையில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸபெருமாள் பல்வேறு வாஹனங்களில் மாட வீதிகளில் புறப்பாடு வந்தது மிகவும் அழகாக இருந்தது. பெருமாள் திருத்தேரில் பக்தர்கள் கோவிந்தா கோவிந்தா என்று சொல்லி வடம் பிடிக்க வலம் வந்தார். பக்தர்கள் ப்ரஹ்மோத்ஸவத்தில் கலந்துகொண்டு ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளை தரிசித்து பாக்யமடைந்தனர். பத்து நாட்கள் நடைபெற்ற இந்த ப்ரஹ்மோத்ஸவம், ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் அருளாசியுடன் நடந்தேறியது.

ஸ்ரீ முரளிஜியின் மாணவ மாணவியருக்கான கூட்டுப் பிரார்த்தனை: சிவகாசி, சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், வில்லம்பட்டி, விருதுநகர், தூத்துக்குடி, தஞ்சாவூர், மதுரை, தேனீ, போடி, நிலக்கோட்டை, வத்தலகுண்டு, ஸ்ரீபெரும்புதூர், கலெட்டிப்பேட்டை, அரும்பாக்கம் மற்றும் மாதவரத்தில் 67 பள்ளிகளில் 43100 மாணவ மாணவியர்களுக்கு நடைபெற்றது.

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Guruwith Consulting Private Ltd**

# அனைத்திற்கும் பயனுண்டு

பாட்டிக்கு ஒரு கதை

ஒரு ஆஸ்ரமத்தில் வசித்து வந்த மஹான், எதையும் வீணடிக்கக் கூடாது என்ற கொள்கையில் எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து வந்தார். ஒரு முறை , சீடன் ஒருவன் குருவிடம், ‘‘ஸ்வாமி! உலகில் படைக்கப்படும் பொருளனைத்தும் இயற்கையாக அழிந்து நிலம் நீர் முதலியவற்றுடன் கலந்து மறுபடி மீள்படைப்பில் இடம் பெற வேண்டும் என்பது நியதி அல்லவா? தாவர, விலங்கு, மனித ஜீவராசிகளின் சரீரங்கள் கூட இந்த நியதியிலிருந்து தப்புவதில்லை. நெல்தானே விதையாகிறது. கொட்டைதானே மரமாகிறது. இப்படி இருந்தால்தான் உலகு உலகாக இருக்கும்.

படைப்புக்கு காலமும் அழிவும் உண்டு அல்லவா ஸ்வாமி? ஆனால் இப்பொழுது பரவலாக உபயோகப்படுத்தப்படும் பிளாஸ்டிக் மற்றும் பல பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்ட பின், பல நூறு வருடங்களாயினும் மண்ணோடு மண்ணாய் கலக்காததாக இருக்கிறது. அதை நீரும் கரைக்காது. எரித்து அழிக்க இயலாது. இந்த பொருட்கள் பலவற்றை மனிதன் உட்பட எந்த ஜீவராசியும் தாவரங்களும் கூட நுகர முடியாமல் இருக்கிறது. இப்படி இவை இருப்பது உலக நியதிக்கு மாறானது மட்டுமல்ல;உலகு உலகாக இயங்குவதற்கு பெரும் தடையானதும் கூட" என்றான். அதை கேட்டவுடன் அந்த மஹான் பதில் எதையும் சொல்லவில்லை.

எனினும் அவர் முகமே அவர் அதை மிக சீரியசாக எடுத்து கொண்டு கவலைப்படுகிறார் என்பதை பறைசாற்றியது.

அதை கேட்டதிலிருந்து, இயற்கையை பாதிக்காத வகையில் தான் தன் ஆஸ்ரமத்தில் செயல்கள் நடை பெறுகின்றனவா என்று சோதிக்க நினைத்தார்.

இரவு நேரம் சமீபித்திருந்தது. அவரது சீடர் லக்ஷ்மண்தாஸ் குருநாதர் இரவில் வெளியே செல்வதால் வெளிச்சத்திற்கு தீவட்டியை ஏற்றிக் கொண்டிருந்தான்.

எளிமையாகவே எப்போதும் உடை உடுப்பார் அந்த சீடர். அன்று அவர் புதிதாக ஒரு வேட்டியை உடுத்தியிருந்தார்.

"லக்ஷ்மணா! புது வேட்டியை உடுத்திக் கொண்டிருக்கிறாயே! பழைய வேட்டியை என்ன செய்தாய்?"

"ஸ்வாமி! பழைய வேட்டியை மடித்து என் படுக்கையாக உபயோகிக்கின்றேன்!"

"ஓஹோ! சரி பழைய படுக்கையை என்ன செய்தாய்?"

"ப்ரபோ! அதை ஜன்னலுக்கு curtain ஆக்கிவிட்டேன்!"

இப்படி அந்த தீவட்டியை ஏற்றிய வண்ணம் பவ்யமாக பதில் அளித்து வந்தான் லக்ஷ்மண்தாஸ்.

"சரி! பழைய curtain ஐ என்ன செய்தாய்?"

"குருநாதா! அதை சிறிது துண்டுகளாக செய்து தளிகை (சமையல்) அறையில் பாத்திரங்களை இறக்கும் துண்டாக பயன்படுத்திவருகின்றேன்!"

"அந்த பழைய துண்டுகளை என்ன செய்தாய்?"

"அவை மிகவும் கிழிந்துவிட்டபடியால், அவைகளை திரிகளாக நமது தீவட்டிகளுக்கு பயன்படுத்திவருகின்றேன்.

இதோ இந்த தீவட்டியும் அதை கொண்டுதான் எரிகின்றது!!"

சந்தோஷப்பட்டார் அந்த மஹான்!

"மிகவும் சந்தோஷமப்பா! இப்படித்தான் எதையும் ஒதுக்காமல் அனைத்தையும் நமது இறைவனின் சேவையில் பயன்படுத்தவேண்டும். இறைவனின் படைப்பான இயற்கைக்கும் அது உசிதம்! இறைவனுக்கும் அதுவே சம்மதம்!" என்றார் அந்த மஹான்.

தீவட்டி சுடர்விட்டு எரிய ஆரம்பித்தது.

அது குருநாதரின் திருப்தியான புன்சிரிப்பை அழகாக எடுத்துக்காட்டியது.

ஸ்ரீ விஷ்ணுப்ரியா

# மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை

# வாம

'வாம' என்ற சொல்லிற்கு பல விதமான அர்த்தங்கள் உள்ளன.

ப்ரதானமாக 'வாம' என்றால் 'இடது' (LEFT) என்று அர்த்தம்.

वामबाहुकृत-वामकपोलो என்று தொடங்கும் ப்ரஸித்தமான யுகள கீதத்தில்- கண்ணன் தனது இடது தோளில் இடது கண்ணத்தை புல்லாங்குழல் ஊதும் அழகை பாகவதம் கூறுகிறது. அதே போல் ஸ்ரீ ராதையை பற்றி வர்ணிக்கும் பொழுது ஸ்ரீ ஸ்ரீ அண்ணா 'गोविन्दवामाङ्किलासिनी' என்கிறார். அதாவது கண்ணனின் இடது பக்கம் விளங்குபவள் என்று பொருள். 'வாம' என்றால் மிகவும் அழகானது என்றும் பொருள் உண்டு. ஸ்ரீமத் பாகவதத்தில், பஞ்ச இளம் பாண்டவர்களான தனது குழந்தைகளை கொன்றது தங்கள் குரு த்ரோணரின் புத்திரனான அஸ்வத்தாமாதான் என்று த்ரௌபதி அறிந்ததும், அவனை வணங்கிவிட்டாள்.


विलोक्य कृष्णा अपकृतं गुरोः सुतं
वामस्वभावा कृपया ननाम च ।

இங்கு அவள் அப்படி வணங்கியதை கூறுகையில் वामस्वभावा என்கிறது பாகவதம். அதாவது 'அழகிய நல்ல குணமுடைய' த்ரௌபதி, தனக்கு தீங்கு இழைத்தது குருவின் புதல்வன் என்று தெரிந்ததும், அவள் த்வேஷம் பாராட்டாமல், அவனை வணங்கினாள் என்கிறது. அதே அர்தத்தில், "வாமலோசனா", (அழகிய கண்களுடையவள்), "வாமப்ரூ"(அழகிய புருவமுடையவள்), "வாமாங்கீ" (அழகான அங்கங்கள் உடையவள்), என்று பல சொற்கள் உள்ளன.

இதற்கு எதிர்மறையாக, 'வாம' என்ற சொல்லிற்கு ஒரு அர்த்தம் உண்டு. அது என்னவென்றால் 'கடுமையான, தீயதான' என்பதாகும். ஸ்ரீமத் பாகவதத்தில் தக்ஷ ப்ரஜாபதி பரமசிவனைப் பார்த்து அவமரியாதையாக பேசினதை கூறும் பொழுது 'उवाच वामं चक्षुर्भ्यां अभिवीक्ष्य दहान्निव' என்கிறது. கண்களால் சுட்டெரிக்கும் படியாக பார்த்து, கடுஞ்சொற்கள் கூறினான் என்று கூறுகிறது.

மற்றொரு அர்த்தமும் உள்ளது. 'வாம' என்றால் 'எதிர்மறையானது','நேர்மறையானது' என்றும் பொருள் உண்டு. அஷ்டபதியில் ராதை தனது ஸகியிடம் கூறுகிறாள் - 'पुनरपि मनो वामं कामं करोति करोमि किं' "கண்ணன் என்னை விட்டு விட்டு பல ஸகிகளுடன் விளையாடிய பொழுதும் கூட, எனது மனம் விசித்திரமாக, நேர் மாறாக கண்ணனிடம் காதலையே செய்கிறது" என்கிறாள்.

"வாமாசாரம்", "வாமமார்கம்" என்று தாந்த்ரிகத்தில் ஒரு வித வழிபாட்டை நாம் கேள்வி பட்டிருப்போம். அது மது, மாம்ஸம், மைதுனம், மத்ஸ்யம், முத்ரா என்று ஐந்து விஷயங்களை கொண்டு செய்யப்படுவது. எல்லோராலும் செய்யப்படக் கூடிய ஒன்று கிடையாது. வெகு சிலர் ரகசியமாக பின்பற்றக் கூடியது. 'வாமதேவ:' என்று பரமசிவனுக்கு ஒரு பெயரும் உள்ளது. இன்னும் பல அர்த்தங்கள் உள்ளன இந்த சொல்லிற்கு. எனினும் இத்துடன் நிறைவு பெறுவோம்.

உலகில் முதன் முதலில் தோன்றிய பல்கலைக் கழகங்களுள் கி.மு ஐந்தாம் நூற்றாண்டில் நமது பாரதத்தில் தோன்றிய நாளந்தா பல்கலைக் கழகமும் ஒன்று! பௌத்த மதத்தை தோற்றுவித்தவரான புத்தர்கூட தன் வாழ்நாளில் இந்தப் பல்கலைக் கழகத்திற்கு வந்து சென்றதாக கூறப்படுகின்றது. சீனக் கல்வி மேதையான யுவான் சுவாங் இப்பல்கலைக் கழகத்திற்கு விஜயம் செய்த காலமான கி.பி ஏழாம் நூற்றாண்டில் இப்பல்கலையில் சுமார் 10,000 மாணவர்களும் 2,000 ஆசிரியர்களும் இருந்ததாக அறியப்படுகின்றது. இப்பல்கலைக் கழகமானது குமாரகுப்தருடைய ஆட்சி காலத்தில் தோற்றுவிக்கப்பட்டதாக வரலாறு தெரிவிக்கின்றது.

நாளந்தா பல்கலைக் கழகத்தின் நூலகமானது அறிவுக் கருவூலம் என்று போற்றப்பட்டது. அது அக்காலகட்டத்தில் புத்த மதத்தின் அறிவுக் களஞ்சியமாக விளங்கியது என்றால் அது மிகையில்லை. ஆக்கிரமிப்பாளர்களால் தீயுட்டப்பட்டபோது, அதில் இருந்த நூற்றுக் கணக்கான; ஆயிரக் கணக்கான தொகுதிகள் பல மாதங்களாக எரிந்து தீயினில் கருகியதாக கூறப்படுகின்றது. நூலகமானது, ஒன்பது அடுக்குகள் கொண்ட மூன்று பிரதானக் கட்டிடங்களைக் கொண்டிருந்தது.


பௌத்தம் மற்றும் ஹிந்து; சமயம் மற்றும் சமய சார்பற்ற; உள்ளாட்சி மற்றும் வெளியுறவு போன்ற ஒவ்வொரு கல்வித் துறையிலும் பல பாடப் பிரிவுகள் இருந்தன. மாணவர்கள் அறிவியில், வானவியல்,

# பாரம்பர்ய பொக்கிஷங்கள்



மருத்துவம், தர்க்க இயல் ஆகியவற்றை மாய உருத்திரிபு (metaphysics), தத்துவம், சாங்கியம், யோக சாஸ்த்திரம், வேதம் மற்றும் பௌத்த மத படைப்புகளில் பயன் முறைக் கல்வியாகக் கற்றனர்! இதைப் போன்றே, அவர்கள் மேன்நாட்டுத் தத்துவங்களையும் ஆர்வமுடன் கற்றறிந்தனர்.

இந்துக் கோவிலான சூரியக் கோவில் அருகே, இன்றும் அழிக்கப்பட்ட நிலையில், நாளந்தாவின் பலக் கட்டிடங்கள் காணப்படுகின்றன. நாளந்தா, உலகில் தோன்றிய முதல் தங்கு வசதி கொண்ட பல்கலைக் கழகமாகும். இது அக்காலக் கட்டிடக்கலைக்கு மிகச் சிறந்த சான்று. ஓங்கி உயர்ந்த மதில்களும்; கதவுகளும் கொண்டது. 8 சுற்றுச் சுவர்களில் உள்ளடங்கிய பல வகுப்பறைகள், தியான மண்டபங்கள் மற்றும் பத்துக் கோவில்களைக் கொண்டது. பல பூங்காக்களும் அழகிய நீர்நிலைகளும் கொண்டு விளங்கியது. ஒவ்வொரு துறையிலும் பலப் பாடப் பிரிவுகளைக் கொண்டு கல்வி கற்பிக்கப்பட்டதால் கொரியா, ஜப்பான், சீனா, திபத், இந்தோனேஷியா, பெர்ஷியா மற்றும் துருக்கி ஆகிய பகுதிகளிலிருந்து பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இங்கு கல்வி பயின்றனர். மன்னர் ஹர்ஷவர்த்தனரின் ஆட்சி காலத்தில் சுமார் 200 கிராமங்கள்வரை இப்பல்கலைக் கழகத்திற்கு தானமாக வழங்கப்பட்டது.



**கிடைக்கும் இடம்**: MADHURAM STORES, Door No 4/11 Netaji Nagar Main Rd, Jafferkhanpet, Chennai – 83, Ph: +9144 24895400/ 9442613710

# சைதன்ய மஹாப்ரபு - 17

## லக்ஷ்மிதேவியின் மறைவு

ஓவியர் : கோவி





யாத்திரையில் இருந்த நிமாயியை, லக்ஷ்மி தேவியின் கடைசி நேர இதய தாபம் வாட்டியது.
ஏனோ மனது சஞ்சலமாக உள்ளது. ஆதலால் யாத்திரையில் மனம் லயிக்கவில்லை. நவத்வீபத்திற்கு திரும்பிவிடலாம்.
நிமாயியின் வருகை நவத்வீபத்தில் பரவியது. செய்தியை கேட்டு, சசி மாதா வீட்டிற்கு வெளியே காத்திருந்தாள்.அவரைக்கண்டதும் விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.
என்ன ஆயிற்று? ஏன் அழுகிறீர்கள்? எல்லோரும் நலம்தானே?
ஒன்றும் கூறாமல் சென்று விட்டாள்
நிமாயி! சொல்வதை மனம் தளரவிடாமல் கேள்! சுகமும் துக்கமும் எப்பொழுது வேண்டுமானாலும் சம்பவிக்கும்.
என்ன சொல்லவருகிறீர்?
உன் பிரிவின் விரஹத்தினால் லக்ஷ்மிதேவி உன்னையே ஸ்மரித்துக்கொண்டு உன் திருவடிகளை அடைந்தாள்.
இதை கேட்ட நிமாயி மனம் உடைந்து போனார். இருப்பினும் தாயை தேற்றுவதற்காக சிறிது கண்டிப்புடன் கூறினார்.
விதி வலியது! நாமென்ன செய்ய முடியும்? யாருடன் எத்தனை நாட்களுக்கு சேர்த்தி உண்டு என்று விதிக்க பட்டிருக்கிறதோ அது தான் நடக்கும். இதை புரிந்து கொள்ளுங்கள்
மனமுடைந்து போன நிமாயி தன் தாயிற்காக கம்பீரமாக இருப்பதுபோல் காண்பித்துக் கொண்டார்.

# படித்ததில் பிடித்தது

**செய்தித் தாள்களிலும் பத்திரிக்கைகளிலும் வந்த சுவாரஸ்யமான செய்திகளின் தொகுப்பு**

A neuroscientist explores the 'Sanskrit Effect'
Scientific American
2 January 2018

**அந்த அறையில் நூறு இளைஞர்கள் தரையில் அமர்ந்திருந்தார்கள். வேஷ்டியை அணிந்திருந்த அவர்கள், இருவரிசையில் ஒருவருக்கொருவரை பார்த்தபடி அவர்களுக்குள் உரையாடிக் கொண்டிருந்தனர். ஒரு இடைநிறுத்தமோ அல்லது தவறோ இல்லாமல், ஒரு வரிசையில் இருப்பவர் ஒரு வரியையும், மற்றொரு வரிசையில் இருப்பவர் அடுத்த வரியையுமாக, மனப்பாடமாக உரைத்தனர். சரியான ஏற்ற இறக்கத்துடன், கணீரென்ற சப்தம் அந்த அறையில் நிறைந்திருந்தது. ஒவ்வொரு சொல்லும் தெளிவாக ஒலித்திட, அவர்களின் வலது கைகள், அதன் சுருதி மற்றும் உச்சரிப்பிற்கு ஏற்றார் போல் சேர்ந்து அசைந்தது. அறையில் எதிரொலித்த அந்த தொன்மையான ஒலி, உடலையும் மனதையும் உருகச் செய்தது. 20 நிமிடங்கள் கழித்து, எல்லோரும் சேர்ந்து நிறுத்தினார்கள். அது பாராயணத்தின் வெறும் ஒரு பகுதியின் எடுத்துக்காட்டு தான். இந்தியாவின் பண்டைய ஸம்ஸ்க்ருத பொக்கிஷங்களில் ஒன்றான ஸுக்ல யஜுர் வேதத்தை முழுவதுமாக பாராயணம் செய்ய 6 மணி நேரமாகும். பல வருடங்களாக ஸமஸ்க்ருதத்தை படித்தும், மொழிபெயர்ப்பும் செய்து வரும் எனக்கு, புத்தியிலும், நினைவுத்திரனிலும் (memory) ஏற்படும் அதன் தாக்கத்தை பார்க்கும் பொழுது, மிகவும் வியப்பாக இருக்கும். நமது பாரத தேசத்தில், மனனம் செய்து கல்வி கற்பதென்பது தொன்று தொட்டு இருந்து வருகிறது. அக்காலத்து வடமொழி வல்லுனர்களும், வித்வான்களும் நிறைய ஸம்ஸ்க்ருத செய்யுள்களை கற்றார்கள். புராதனமான சொற்களும், செய்யுள்களுமான மந்திரங்களை மனப்பாடம் செய்து பாராயணம் செய்வதில், நினைவாற்றல் மற்றும் சிந்தனை மேம்படுகிறது. எவ்வளவுக்கெவ்வளவு ஸம்ஸ்ருதத்தை நான் படித்தும் மொழிபெயர்ப்பும் செய்கின்றேனோ, அவ்வளவுக்கவ்வளவு என்னுடைய சொல்லாற்றல்(verbal memory) மேம்படுவதை கவனித்திருக்கிறேன். என்னுடன் வேலை செய்யும் சக ஆசிரியர்களும், மாணவர்களும், ஒரு சொற்பொழிவாளரின் வாக்கியங்களை மீண்டும் அப்படியே ஒப்பிக்கும் எனது ஆற்றலைக் கண்டு மிகவும் வியப்படைவார்கள். நம் கலாசாரம் சொல்வது போல், ஒவ்வொரு மொழிக்கும், தனிப்பட்ட முறையில், 'ஸம்ஸ்க்ருதத்தின் தாக்கம்' என்ற ஒன்று உள்ளதோ?**

## புதிய வெளியீடுகள்


நம் குருநாதரின்
கீர்த்தனங்களான

# மதுரகீதம்

VOL 21

- சேலம் ஸ்ரீ ஸ்ரீராம்

விலை:
**Rs 100/-**





நம் குருநாதர் அவர்களின்
திவ்ய சரித்திரம்


# மதுரஸ்மரணம்

My Guru As I See Him

- Dr பாக்யநாதன்ஜி

விலை:
**Rs 100/-**




தசமஸ்கந்தத்தின் ஆங்கில
விளக்கஉரை

# ஆஷ்ரயம்

- குமாரி சங்கீதாஜி

விலை:
**Rs 500/-**




நம் குருநாதர் அருளிச்செய்த

## கலிதர்ம உந்தியாரின்

விளக்க உரை

## Dr பாக்யநாதன்ஜி

விலை: **Rs 200/-**

**கிடைக்கும் இடம்,**
MADHURAM STORES
Door No 4/11 Netaji Nagar Main Rd,
Jafferkhanpet, Chennai - 83
Ph: +9144 24895400/ 9442613710

| சத்சங்க நிகழ்ச்சிகள் | |
|---|---|
| 11 பிப்ரவரி 2018 | ஏகாதசி |
| 11 பிப்ரவரி 2018 | சத்சங்கம், விவேகானந்தர் இல்லம், சென்னை |
| 14 பிப்ரவரி 2018 | கன்யாகுமரி ஸ்ரீ ஜய ஹனுமான் ப்ரதிஷ்டா தினம், மதுரபுரி ஆஸ்ரமம் |
| 26 பிப்ரவரி 2018 | ஏகாதசி |
| 4-10 மார்ச் 2018 | சத்சங்கம், திருவண்ணாமலை யோகி ராம்சுரத்குமார் ஆஸ்ரமம் |
| 13 மார்ச் 2018 | ஏகாதசி |

## அறிவிப்பு

அனைத்து வாசகர்களும், தங்களது தொலைபேசி எண்ணை, தங்களது சந்தா எண்ணுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

Email: helpdesk@madhuramurali.org
Ph: "24895875"

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை அனுப்பவேண்டிய முகவரி

Dr.A.BHAGYANATHAN,
Personal Secretary to
HIS HOLINESS
SRI SRI MURALIDHARA SWAMIJI
Plot No 11, Door No 4/11,
Netaji Nagar Main Road,
Jafferkhanpet, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org

**மதுரமுரளி**

- Publisher : S. Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
- Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
- Advertisements in Madhuramurali are invited.



**யோகி ராம்சுரத்குமார் ஜயந்தி உத்ஸவத்தில், 6 January**



Registered with The Registrar of Newspapers for India
R.No 62828/1995
Regd. No. TN/CC(S)DN/119/15-17

Date of Publication: 1st of every month
Date of Posting: 5th and 6th of every month
Licensed to post without prepayment
WPP No. TN/PMG(CCR)WPP—608/18-20





Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No2, Old No 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai – 83 and Printed by Mr R. Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A. Sivakasi Co-op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar





சேங்கனூர்
ஸ்ரீ ஸ்ரீனிவாச
பெருமாள் கோவில்
ப்ரஹ்மோத்சவம்,
15-25 January 2018